# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 28/2018**

பெயர்: **சித்தையன்** நாள்: 12.12.2023

பி.வா.சா.2 – 5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.2 – சித்தையன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.37</u>

வழக்கு சொத்தானது பொதுப்பணித்துறைக்கு சொந்தமான வாய்க்கால் கரை என்று சொன்னால், சரிதான்.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

அசல் வழக்கை நான்தான் தாக்கல் செய்துள்ளேன். வாய்க்காலில் தண்ணீர் செல்கிறது, அதற்காக வழக்கை தாக்கல் செய்துள்ளோம். சின்னபையன், சண்முகம் என்பவர் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சின்னபையன் எங்கு குடியிருந்து வருகிறார் என்று தெரியாது. சண்முகம் சின்னபையனின் மகன் ஆவார். அவரும் எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. நான் முதன்மை சாட்சிய்ததில் கூறியுள்ள விபரங்களை நான்தான் கூறினேன். சின்னபையனுக்கு எங்கு நிலம் உள்ளது என்பது தெரியாது. சின்னு, கனகராஜ், பூபதி ஆகியோர்கள் என்னுடைய அண்ணன் மகன்கள் ஆவார்கள். என்னுடைய அண்ணன் மகன்கள்மீது நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ள மற்ற பிரதிவாதிகள் சின்னுபையன் மற்றும் சண்முகம் ஆகும். காவேரிப்பட்டி அக்ரஹாரம் எங்கள் ஊருக்கு கிழக்கே 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது கோனேரிப்பட்டி அக்ரஹாரத்திற்கு சம்பந்தப்பட்டது என்றால், சரிதான்.

2) நான் முதன்மை சாட்சியத்தில் மேற்படி வழக்கு சொத்தில் கூறப்பட்டுள்ள வாய்க்கால் காவேரிப்பட்டி அக்ரஹாரம் கிராமத்தில் சர்வே எண் 181/1 ல் ஓடுகிறது என்பதும், அந்த வாய்க்கால் அரசுக்கு பாத்தியப்பட்டது என்பதும், அது இந்த வழக்கின் 5 ம் பிரதிவாதியாகிய பொதுப்பணித்துறையால் பராமரிக்கப்படுகிறது என்று கூறுவது தவறாகும். என்னுடைய கிராமத்தில் கிழக்கு கரை வாய்க்கால் செல்கிறது. கிழக்கு கரை வாய்க்காலில் இருந்து மதகுகளின் வழியாக கன்னிவாய்க்கால் செல்கிறது என்றால், சரிதான். கிழக்கு கரை வாய்க்காலின் அகலம் பொதுப்பணித்துறை ஆவணப்படி 4 மீட்டர் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. வாய்க்காலுக்கு இருபுறமும் கல்கட்டுகள் கட்டி

இருபுறங்களிலும் நிலங்களை விட்டு பொதுப்பணித்துறை பராமரித்து வருகிறது என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. நான் உழவடை செய்து வரும் நிலத்திற்கு வண்டித்தடம் இல்லை. வாய்க்காலை ஒட்டிதான் வீடு கட்டி குடியிருந்து வருகிறோம் என்றால், சரிதான். வாய்க்காலை ஒட்டியுள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான இடத்தில் கட்டிடம் கட்ட முயற்சி செய்தோம் என்றால், இல்லை. கட்டிடம் கட்ட முயற்சி செய்ததை சின்னபையன் தடுத்ததால்தான் நான் சின்னபையன்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

3) சர்வே எண் 182/6 ல் நிலம் உள்ளது. சர்வே எண் 182/6 ல் நிலம் இல்லையென்று முதன்மை சாட்சியத்தில் கூறியுள்ளேன் என்றால், சரிதான். நிலம் இல்லையென்று முதன்மை சாட்சியத்தில் கூறிவிட்டு எதற்காக வழக்காடுகிறேன் என்று சொன்னால், எனக்கு நிலம் உள்ளது. கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராமத்தில் எனக்கு 1 1/2 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் எனக்கும், எனது அண்ணன் குடும்பத்தாருக்கும் பாத்தியமுள்ளது. நான் முதன்மை சாட்சியத்தில் சர்வே எண் 182/6 ல் 57 செண்ட் நிலம் பாத்தியம் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியவில்லை. கன்னி வாய்க்காலை ஒட்டிதான் எங்கள் நிலத்திற்கு கிளை வாய்க்கால் வருகிறது என்று சொன்னால், 3 இஞ்ச் தண்ணீர் வருகிறது. மேட்டுர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கும்போதுதான் தண்ணீர் வரும். என்னுடைய நிலத்திற்கு வருவது கன்னி வாய்க்கால் என்றால், சரிதான். வாய்க்காலுக்கு இருபுறத்திலும் 3 அடி அகலத்தில் நடை பாதை உள்ளது. வாய்க்காலுக்கு இருபுறமுள்ள நிலத்தின் வழியாகத்தான் விவசாயத்திற்கான டிராக்டரை ஓட்டி சென்று வருகிறோம் என்று சொன்னால், சரியல்ல.

4) வயல் சேரும் சகதியுமான இருக்கும்போது டிராக்டரை ஓட்ட முடியாது என்று சொன்னால், சரிதான். வாய்க்காலின் ஓரத்தின் வழியாகத்தான் டிராக்டர்களை பட்டா நிலத்துக்காரர்கள் ஓட்டி சென்று வருகிறார்கள் என்று சொன்னால், சரியல்ல. வெள்ளாமை செய்து அறுவடை செய்யும் காலங்களில் அனைத்து நிலங்களும் பயிர்கள் இருக்கும். அறுவடை காலங்களிலும், வண்டி வாகனங்களை பயிர்களை அழித்துதான் ஓட்டி செல்கிறோம் என்று சொன்னால், சரியல்ல. நீதிமன்ற ஆணையரை எதற்காக நியமிக்க வேண்டும் என்பது எனது அண்ணன் மகனை கேட்டால்தான் தெரியும். அசல் வழக்கை எனது அண்ணன் மகன்தான் நடத்தி வருகிறார் என்று சொன்னால், சரியல்ல. இருவரும் சேர்ந்துதான் நடத்தி வருகிறோம். சின்னபையன் கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால், இல்லை. அதில் என்ன விபரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. கிரைய பத்திரத்தில் உள்ள விபரங்களை நான் கூறியுள்ளது தவறு என்று

சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்து என்ன என்பது எனக்கு தெரியாது. அதனால் அதில் என்ன உரிமையுள்ளது என்பதை நான் கூறு அருகதை இல்லையென்று சொன்னால், சரியல்ல. நான் முதன்மை சாட்சியத்தில் பத்தி 10 ல் கூறியுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. வழக்கு குறித்த விபரங்கள் எதுவும் தெரியாது என்றாலும், வாதி விவசாய நிலத்தை பயன்படுத்துவதை தடுப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

5) சின்னபையன் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது, யார்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரமும் எனக்கு தெரியாது. எந்த சர்வே எண்ணிற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரமும் எனக்கு தெரியாது. வாய்க்காலிலிருந்து 20 அடி தூரம் தள்ளிதான் நான் வீடு கட்டியுள்ளேன். எனது நிலமும், வீடும் மதகை ஒட்டிதான் உள்ளது. என்னுடைய நிலத்திற்கு அடுத்துதான் வாதியின் நிலம் மற்றும் மற்றவர்களின் நிலம் உள்ளது. வாய்க்காலை ஒட்டி என்னுடைய நிலம் உள்ளதால், மற்ற நிலங்களை சென்றடைய உள்ள தடத்தை தடுத்தால்தான் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. வாய்க்காலானது 3 அடி அகலத்தில் உள்ளது. கரையின் கல் கட்டுகள் 3 அடி அகலத்தில் உள்ளது. கரையை ஒட்டி இருபுறங்களிலும் தடம் செல்கிறது என்று சொன்னால், சரியல்ல. ஒரு பக்கத்தில் செல்கிறது. முதன்மை சாட்சியத்தில் தடம் வாய்க்காலுக்கு இருபுறங்களிலும் செல்கிறது என்று கூறுவது பொய்யா என்று சொன்னால், தடம் ஒரு பக்கத்தில்தான் செல்கிறது. வாய்க்காலுக்கு இருபுறமும் நடை தடம் செல்வதாக கூறி தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண ஆவணம் பொய் என்று சொன்னால், சரிதான்.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12.13</u>

ஒப்பம் / சித்தையன்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.